டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 27.7.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 033 - Madurai | Online Edition

# நாட்டில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது

புது தில்லி, ஜூலை 26

நாட்டில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான பிரத்யேக திட்டங்களான பாரம்பரிய கிரிஷி விகாஸ் யோஜனா வடகிழக்கு பிராந்தியத்தில் கரிம மதிப்புச் சங்கிலி மேம்பாட்டு இயக்கம் ஆகியவற்றை அரசு 2015-16 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் கீழ், இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தி இயற்கை வேளாண்மை சாகுபடியில் ஈடுபட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இயற்கை வேளாண் உற்பத்தி முதல் சந்தைப்படுத்தல் வரை. பண்ணை நிலத்திலேயே இயற்கை உர உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு நேரடி பயிற்சி அளிப்பது இந்தத் திட்டங்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் உள்ளிட்ட பல்வேறு கரிம இடுபொருட்களுக்காக விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விவசாய யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.15,000 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், சந்தை மேம்பாட்டு உதவி கரிம உரங்களை ஊக்குவிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை உரங்களான நொதித்த இயற்கை உரம், பாஸ்பேட் செறிந்த இயற்கை உரம் ஆகியவை நியாயமான விலையில் கிடைக்க இயலும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கவும், நவீன வேளாண் தொழில்நுட்பத்திற்கான அணுகலை வழங்கவும் இந்திய அரசு நமோ ட்ரோன் சகோதரி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்போட்டியில், உரத்துறை உர நிறுவனங்கள் மூலம் சுய உதவிக் குழுக்களின் நமோ ட்ரோன் சகோதரிக்கு 1,094 ட்ரோன்களை விநியோகம் செய்வதை உறுதி செய்துள்ளது. 2023 நவம்பர் 15, அன்று தொடங்கப்பட்ட வளர்ச்சியடைந்த பாரத லட்சிய யாத்திரையின் போது, பல்வேறு

பயிர்களில் நானோ மற்றும் நீரில் கரையக்கூடிய உரங்களை தெளிப்பதற்காக 1.79 லட்சம் ட்ரோன் பயன்பாடுகள் செயல்விளக்கம் செய்யப்பட்டன.

உயிர் உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் பல்வேறு பயிர்கள் மற்றும் மண் வகைகளுக்கேற்ற மேம்படுத்தப்பட்ட மற்றும் திறமையான உயிர் உரங்களை உருவாக்கியுள்ளது. அதிக ஆயுட்காலம் கொண்ட திரவ உயிர் உர தொழில்நுட்பமும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் பல்வேறு வகையான உயிர் உரங்கள் / உயிரி செறிவூட்டப்பட்ட கரிம உரங்களை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. செயல்விளக்கம், உழவர் விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம் இவை ஊக்குவிக்கப்படுகின்றன. உயிரி உரங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் பயிற்சி அளிக்கிறது.

மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் அனுப்பிரியா படேல் இத்தகவலை மக்களவையில் தெரிவித்தார்.

# வேளாண் மாணவிகள் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம்



திண்டுக்கல், ஜுலை 26

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண்மை பட்டப்படிப்பு மாணவிகள் விஸ்வ பிரியா, முத்து ஸ்ரீ அபிராமி, விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர் தேனி அருகே உள்ள வேப்பம்பட்டியில் சின்னமனூர் மாவட்ட வேளாண் விரிவாக்கத்துறை அட்மா திட்டத்தின் மூலம் ‘ஒருங்கிணைந்த பண்ணையம் ‘ என்ற தலைப்பில் விவசாயி களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இம்மாணவிகள் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நன்மைகள் மற்றும் அதை உருவாக்கும் செயல்முறையையும் மற்றும் கால்நடை சம்மந்தப்பட்ட குடற்புழு நீக்கம் பற்றி விளக்கினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்
# விவசாய மாநாடு மற்றும் கண்காட்சி

கிருஷ்ணகிரி, ஜூலை 26

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உணவுப்பொருள், விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்பவர்கள் இன்று சனிக்கிழமை நடைபெறும் விவசாய மாநாடு மற்றும் விவசாயக் கண்காட்சியில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கண்காட்சியில் விவசாயப்பொருட்களுக்கான அரசின் தரம் குறித்து இந்திய அரசின் Breau of Indian Standard அமைப்பின் மூத்த விஞ்ஞானிகள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கு கின்றனர்.




எனவே விவசாயம், உணவுப்பொருட்கள், ஏற்றுமதி, இறக்குமதி செய்ய ஆர்வம் உள்ளவர்கள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டிய நிகழ்வாக இது அமையும்.

மாநாடு மற்றும் கண்காட்சியானது நாளந்தா சர்வதேச ளீயறீசி பள்ளி, கிருஷ்ணகிரியில் நடைபெறுகிறது என அக்ரிசக்தி செல்வ முரளி குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் விபரங்களுக்கு 99407 64680 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் தொடங்க கிராமப்புற இளைஞர்களுக்கு தீவன உற்பத்தி பயிற்சி

புதுக்கோட்டை, ஜூலை 26

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக தொழில் தொடங்க விரும்பும் கிராமப்புற இளைஞர்களுக்கு தீவன உற்பத்தி மற்றும் மேலாண்மை குறித்து ஒரு வார பயிற்சி நடைபெறுவதாக திட்ட இயக்கு நர் (அட்மா) மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் (பொ), வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், STRY திட்டத்தின் கீழ் மத்திய வேளாண் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் ஹைதராபாத் மேனேஜ் மற்றும் குடுமியான்மலை, சமிதி நிறுவன வழிகாட்டு நெறிமுறைகளின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில்தொடங்க விரும்பும் கிராமப்புற இளைஞர்களுக்கான தீவன உற்பத்தி மற்றும் தீவன மேலாண்மை குறித்த ஒரு வார பயிற்சி வரும் ஆகஸ்ட் - 2024 மாதம் மூன்றாவது வாரத்தில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் கிராமப்புற இளைஞர்கள் 18 முதல் 40 வயது வரை உள்ளவர்களாகவும் குறைந்தது ஐந்தாம் வகுப்பு படித்தவராகவும் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி ஒரு வாரத்திற்கு ஆகஸ்ட் -2024 மாதம் மூன்றாவது வாரத்தில் 28 கிராமப்புற இளைஞர்களுக்கு வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் தொடர்ந்து ஒரு வாரம் கலந்து கொள்ளும் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வங்கிக் கடன் பெற்று தொழில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

எனவே, இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் புதுக்கோட்டை மாவட்ட கிராமப்புற இளைஞர்கள் உடனடியாக தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட திட்ட இயக்குநர் (அட்மா) மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் வி.எம்.ரவிச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 26.07.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 50 | 54 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 54 | 58 | 57 | உருளை (கோலார்) | 44 | 50 |
| 1B | கத்திரி(Nadu) | 64 | 68 | 57A | உருளை(ஊட்டி) | 80 | 88 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 30 | 34 |
| 3 | தக்காளி (நாடு) | 30 | 33 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 35 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 32 | 60 | கேரட் | 105 | 115 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 34 | 38 | 62 | நூல்கோல் | 50 | 55 |
| 7 | பீர்க்கன் | 34 | 38 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 32 | 38 |
| 9 | பாகற்காய் | 60 | 65 | 65 | மு.கோஸ்(கலர்) | 55 | 60 |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 30 | 36 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 30 | 68 | பூண்டு | 190 | 264 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 54 | 58 | 69 | இஞ்சி | 140 | 144 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 86 | 94 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 37 | 40 | 72 | குடமிளகாய் | 45 | 68 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 70 | 76 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 60 | 64 | 71A | | | |
| 20 | தேங்காய் | 28 | 32 | | | | |
| 21 | மாங்காய் | 35 | 40 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 68 | 75 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 46 | 78 | பப்பாளி | 26 | 32 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 30 | 36 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 36 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | | | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | | |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 80 | 90 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 120 | 150 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# பவானிசாகர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் மூலம் பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி

ஈரோடு, ஜூலை 26

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரத்தில் புங்கார், தொட்டம்பாளையம், தொப்பம்பாளையம் கிராம விவசாயிகளுக்கு பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி, மீன்வளப் பல்கலைக் கழகம் பவானிசாகர்–யில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் யசோதா தலைமை தாங்கினார்.

பவானிசாகர் வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் பல்வேறு விதமான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக பவானிசாகர் மீன்வளப் பல்கலைக் கழகம் பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி நடத்தப்பட்டது.




இப்பயிற்சியில் டாக்டர் எஸ்.ஆனந்த், உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் நன்னீரில் மீன் வளர்ப்பு முறைகள் , பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு முறைகள், மீன் வகைகள் மற்றும் இரகங்கள், தீவனத்தின் அளவுகள், அலங்கார மீன் வகைகள் குறித்து விரிவாக கூறினார். பல்கலைக்கழகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தொழில்நுட்பங்கள், வளர்க்கப்படும் நீர்த்தாவரங்கள், அலங்காரச் செடிகள் குறித்தும் விளக்கினார். மேலும் பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் யசோதா, வேளாண்மைத் துறையில் நடைமுறையில் உள்ள திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். மேலும் துணை வேளாண் அலுவலர் பிரபாகரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ரா.தீபா கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்படுகளை அட்மா திட்டப்பணியாளர்கள் செய்திருந்தனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# அலங்காநல்லூர் வட்டாரத்தில் அங்கக வேளாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூலை 26

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் மாணிக்கம் பட்டி கிராமத்தில் அங்கக வேளாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 25.7.24ம் தேதி அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் மு.மயில், மத்திய மாநில திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மற்றும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது மற்றும் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் திட்டம் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார்.

அலங்காநல்லூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலாமணி, இயற்கை வேளாண்மை முறைகள் பற்றியும் அதற்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் இராமன், பேசுகையில் காரீப் பருவத்தில் பயிர் செய்யக்கூடிய பயிர்களுக்கு பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், பசுந்தாள் உரப்பயிர்கள், இயற்கை பூச்சி விரட்டிகளான இஞ்சி பூண்டு கரைசல், தெர்மோமோர் கரைசல் மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்தி இயற்கை முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார். தோட்டக்கலை உதவி அலுவலர் ஜெயகுமார் கலந்து கொண்டு கலைஞர் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள்,

கொய்யா சாகுபடி தொழில்நுட்பங்கள், நெட்டை குட்டை தென்னங்கன்றுகள் குறித்து எடுத்துரைத்து அதனை விவசாயிகள் மானியத்தில் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். வேளாண் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் வேளாண் விற்பனைத்துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் விளை பொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்து அதிக இலாபம் பெறலாம் எனவும் விரிவாக எடுத்துக் கூறினார்.

அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ப.வேல்முருகன் பயிர்களுக்கு தேவையான பதினாறு வகை சத்துகள் குறித்தும் பஞ்சகாவ்யம், பயன் படுத்தும் முறைகள் பற்றியும் அட்மா திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுளை உதவி தொழில் நுட்ப மேலாளர் சௌந்தராஜன், வசந்தி செய்து இருந்தினர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் உதவி வேளாண்மை அலுவலர் இந்திரஜித் நன்றி கூறினார்.

# அறிவியல் முறையில் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

திருவண்ணாமலை, ஜுலை 26

திருவண்ணாமலை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 30ம் தேதி இலவச ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது.

அறிவியல் முறையில் வெள்ளாடு வளர்ப்பு வரும் 30ம் தேதி, எண்.145, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், புறவழிச் சாலை, வடஆண்டாப்பட்டு, திருவண்ணாமலையில் நடைபெற உள்ளது. மேலும் விபரங்களுக்கு 04175 - 298258, 95514 19375 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சிக்கு வரும் போது ஆதார் எண் கொண்டு வரவும்.

இத்தகவலை உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், புறவழிச் சாலை, வடஆண்டாப்பட்டு, திருவண்ணா மலை தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தலைவாசல் வட்டாரத்தில் பயறு வகை பயிர்களில் விதை நேர்த்தி மற்றும் உற்பத்தி மேம்பாடு பயிற்சி



சேலம், ஜூலை 26

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் புனல்வாசல் கிராமத்தில் அட்மா திட்டத்தில் வேளாண்மை துறை சார்பாக பயிர் வகை பயிர் களில் விதை நேர்த்தி மற்றும் உற்பத்தி மேம்பாடு குறித்து பயிற்சி அப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வட்டார தொழில்நுட்பம் மேலாளர் சக்தி அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து கூறினார்.

இப்பயிற்சியில் தலைவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா பேசுகையில் தமிழ்நாடு அரசின் பசுமை போர்வை திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தரிசு நிலங்களை விளை நிலங்களாக்கும் திட்டம், நுண்ணீர் பாசனம் சான்று விதைகளின் அவசியம் குறித்து பேசினார். விதை சான்று மற்றும் உயிர்மச்சான்று வேளாண்மை உதவி இயக்குனர் நவநீதகிருஷ்ணன் பேசுகையில் பயிர் வகை பயிர்களில் விதை நேர்த்தி செய்யும் முறைகள் மற்றும் விதை உற்பத்தி வழிமுறைகளை எடுத்துரைத்தார். சான்று விதை உற்பத்தியின் மூலம் கூடுதல் வருமானம் உழவர்களுக்கு கிடைக்கும் என கூறினார். விதை சான்று அலுவல சுரேந்திரன் தனது உரையில் உயிர் உரங்களின் பயன், நுண்ணூட்ட சத்துக்களை பயன்படுத்தும் வழிகள் குறித்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் விவசாயிகளிடம் பேசுகையில் தரமான விதையை கூடுதல் லாபம் தரும் என்பதையும் விதை நேர்த்தியின் அவசியம் குறித்தும் கூறினார். அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ், முத்துவேல், உதவி தோட்டக்கலை அலுவலர் ஐயப்பன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் ராஜலட்சுமி பங்கேற்று தங்கள் துறைகள் மூலம் செயல்படும் திட்டங்களை கூறினர். உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ் நன்றி கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நில மோசடியை தடுக்க கிராமப்புற நிலங்களுக்கு, தனி அடையாள எண்? எப்படி?



இந்திய குடிமக்களுக்கு ஆதார் எண் வழங்கப் படுவது போல (கிராமப்புற நிலங்களுக்கு தனித்துவ மான அடையாள எண்) நிலங்களுக்கு, ஆதார் எண் போல எண் (UNIQUE IDENTIFICATION NUMBER) வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

**அது எப்படி?**

கிராமப்புற நிலங்களில் விற்பனையில் பல்வேறு மோசடி, பட்டாவில் மாற்றம் போன்றவற்றில் தற்போதைய நிலையில் நிறைய குளறுபடிகள் பத்திரபதிவின் போது நடக்கிறது. அதனை தீர்வு காண விவசாயிகள் பொதுமக்கள் கோர்ட், காவல் நிலைய படிகளில் ஏறி இறங்குவதை தடுக்க மத்திய அரசு இந்த பட்ஜெட்ல இந்த நிலங்களுக்கான அடையாள எண் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அடையாள எண்ணின் தனித்துவம் எப்படி?**

நிலத்துக்கான இந்த தனித்துவமான எண் மூலம் அந்த நிலம் அமைந்துள்ள மாநிலம், மாவட்டம், கிராமப்புற நிலத்தின் உரிமையாளர் பெயர் போன்ற உள்ளிட்ட அனைத்து விதமான விபரங்களையும் அறிய முடியும். அத்துடன் அல்லாது நிலத்தின் சர்வே, அளவீடு உள்ளிட்ட விபரங்களும் இடம் பெற்றிருக்கும்.

இதனால் நில விற்பனையில் மோசடி, ஆள் மாறாட்டம் போன்றவை குறையும் என்பதுடன் வரி வசூல் செயல்பாடுகள் எளிமையாகும் என்று கூறப்படுகிறது. இதை தவிர்த்து, கிராமப்புற நில வரைபடங்கள், டிஜிட்டல் மயமாக்குதல், நிலங்களை ஆய்வு செய்தல் மற்றும் நிலப் பதிவேட்டை பராமரிப்பது போன்ற செயல்பாடுகள் எளிமை யாக்கப்படுகிறது. ஏற்கனவே நகர்ப்புற நிலங்களின் அனைத்து தகவல் அமைப்பு உதவியுடன் டிஜிட்டல் மயமாக்கப்படுகிறது.

நிலத்தின் அட்ச ரேகை மற்றும் தீர்க்க ரேகை (LATITUDE AND LONGITUDE CO-ORDINATES) ஒருங்கிணையும் மையப் புள்ளி கொண்டு உருவாக்கப்படும். இந்த அடையாள எண் நிலமோசடிகளை தடுக்க உதவிடும்.

மத்திய அரசு மேற் கொண்டு வரும் பல்வேறு நிலச்சீர் திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த திட்டங்கள் நடப்பு பட்ஜெட்ல 24-25) செயல்படுத்த, மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு செயல்படுத்த முடிவெடுக்க பட்டுள்ளது.

அதாவது (DIGITAL INDIA LAND MODERNIZATION PROGRAMME) 2008 யின்படி இந்த திட்டம் நடைமுறைப் படுத்தபடும்.




அடுத்த 3 ஆண்டிகளில் அனைத்து கிராமப்புற நிலங் களுக்கு இந்த அடையாள எண் வழங்கிட முடிவெடுக்கப்பட்டு அதை சரியாக நிறைவேற்றிட மாநிலங்களுக்கு, மத்திய அரசு உதவிகளை வழங்கிட தயாராக உள்ளதாக பட்ஜெட்ல தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்துவமான எண்களால் நில மோசடி தடுக்கப்படும் என்பது உறுதியாகிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த அட்மா திட்ட பயிற்சி

திருச்சி, ஜுலை 26

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், சனமங்கலம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி தலைமை வகித்து திட்ட விளக்க உரை ஆற்றினார். மேலும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விதை இருப்பு மற்றும் விதைப்பு முறைகளை பற்றி எடுத்துக் கூறினார். குமுளூர் வேளாண்மை பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் றீ.ம்.சிவக்குமார் மூங்கில் சாகுபடிக்கான விழிப்புணர்வு குறித்து அறிமுக உரையற்றினார். கல்லூரியின் தொழில் நுட்ப வல்லுநர் விஜய், பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பயிற்சி வழங்கினார். பருத்தி வரப்பில் ஆமணக்கு நடுவதன் முக்கியத்துவம், பருத்தியில் தாக்கும் முக்கியாமான இளஞ்சிவப்பு காய் புழு மற்றும் அதை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் பருத்தியை தாக்கும் கள்ளி (மாவு)பூச்சி மற்றும் அதை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும், மஞ்சள் வண்ண ஒட்டு அட்டை, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சி பொறி பயன்படுத்தும் முறைகள் மற்றும் முக்கியத்துவம் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். அடுத்ததாக பேசிய இக்கல்லூரியின் பேராசிரியர் ராதாகிருஷ்ணன், பருத்தியில் நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார்.

சனமங்கலம் உதவி வேளாண்மை அலுவலர் பன்னீர் செல்வம் நடப்பு பருவத்திற்கு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள விதைகள், நுண்ணூட்டச் சத்து கலவைகள் மற்றும் அதன் மானியங்கள், தக்கைப்பூண்டு விதை இருப்பு குறித்து உரை ஆற்றினார். முன்னதாக வட்டார தொழில் நுட்ப மேலாளர் அபிராமி வரவேற்பு அளித்து உழவன் செயலியின் முக்கியத்துவம் மற்றும் பதிவேற்றம் செய்யும் முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் சிந்தியா செய்து இறுதியில் நன்றி உரை கூறினார்.

# அங்கக வேளாண்மை சாகுபடிக்கானச் சான்று பெறும் வழிமுறைகள் குறித்த பயிற்சி

அரியலூர், ஜூலை 26

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரம் குழுமூர் வருவாய் கிராமத்தில் வேளாண்மைத்துறையின் கீழ் இயங்கும் அட்மா திட்டம் மூலம் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி விவசாயிகள் அங்கக வேளாண்மை சாகுபடிக்கானச் சான்று பெறும் வழிமுறைகள் எனும் தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா அறிவுரையின் பேரில் பயிற்சி நடைபெற்றது.





இப்பயிற்சியில் முதலாவதாக அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். பின்னர் பேசிய வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலுசாமி அங்கக வேளாண் முறையில் சாகுபடி செய்யும் தொழில்நுட்பங்களான பஞ்ச காவ்யா, மீன் அமினோ அமிலம், ஜுவாமிர்த கரைசல் பற்றியும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை பயன்படுத்தும் முறை அதன் பயன்கள் பற்றியும் எடுத்துரைத்தார். அங்கக வேளாண் முறையில் சாகுபடி செய்து எவ்வாறு அங்கக வேளாண் சான்று பெறுவது என்பது பற்றி விரிவாக எடுத்து கூறினார் மற்றும் மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதலின் அறிகுறிகள் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்ற தொழில்நுட்ப செய்திகளை எடுத்து கூறினார்.




அடுத்து பேசிய உதவி வேளாண்மை அலுவலர் ஆனந்தி முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்களான பசுந்தாள் உர உற்பத்தி, மண்புழு உர உற்பத்தி மற்றும் பாரம்பரிய நெல் இரகங்கள் பற்றியும் செந்துறை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் அதன் மானிய விபரம் பற்றி எடுத்து கூறினார்.

இப்பயிற்சியின் நிறைவாக அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சிவா மற்றும் முருகன் நன்றியுரை கூறினார். இந்தபயிற்சியில் இளநிலை ஆராய்ச்சியாளர் சுகந்தி, முன்னோடி விவசாயி பூபதி மற்றும் குழுமூர் கிராமத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்நதனர்.

# வறட்சியை தாங்க விதை நேர்த்தி அவசியம்

## விதைப்பரிசோதனை அலுவலர் தகவல்

வானம் பார்த்த பூமி என்று சொல்லப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழையை நம்பி மானாவாரி பயிர் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானாவாரி சாகுபடியில் மழை பெய்த பின் விதைப்பதால், முதலில் கிடைக்கும் மழை நீர் வீணாவதுடன் அதிக அளவு மழை பெய்த பின் உடனே விதைப்பதும் கடினமான ஒன்றாகிறது.

பருவமழை பெய்வதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன், முன் பருவ விதைப்பு செய்வாதல்,மழை நீர் சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு சீரான விதை முளைப்புத்திறனுடன் பயிர் செழித்து வளர்ந்து அதிக விளைச்சல் கொடுக்கிறது.

சில சமயங்களில், விதை முளைக்கும் தருணத்தில் குறை வான மழை பொழிவு கிடைக்கும் பட்சத்தில் அல்லது மழை பெய்யத் தவறும் பொழுது விதைகள் வறட்சிக்கு உட்பட்டு விதை முளைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. இச்சிரமத்தை தவிர்க்கும் வகையில் விதைகளை விதைப்பதற்கு முன் கடினபடுத்தி விதைக்கலாம்.

நெல் விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் விதைகளை 1:1 என்ற விகிதத்த்தில் 16 மணி நேரம் ஊறவைத்து, பின்பு நிழல் காய்ச்சலில் விதைகளை முன்பு இருந்த ஈரப்பத்தற்கு உலர்த்தி விதைக்க வேண்டும். இவ்வாறு விதைகளை கடினப்படுத்தி விதைப்பதால், விதைகள் ஆரம்ப காலத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி முளைத்து அதிக விளைச்சலை தருகின்றது.

அங்கக வேளாண்மை முறையில் மானாவாரி நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பொட்டச்சியம் குளோரைடு உப்பிற்கு பதிலாக நன்மை செய்யும் மெத்தைலோ பாக்டிரியாவான, PPFM திரவ நுண்ணுயிர் உரத்தை பயன்படுத்தலாம்.

நீர் பற்றாக்குறை அல்லது வறட்சியால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு ஒரு சதவிகித PPFM திரவத்தை தெளிப்பதன் மூலம் பயிர்கள் நீரின் தேவையின்றி 5 முதல் 10 நாட்கள் வரை வாடாமல் வறட்சியை தாங்கும் தன்மையை பெறுகின்றது.

இந்த திரவ நுண்ணுயிர் உரத்தை உபயோகிக்கும் பொழுது இதனுடன் வேறு எதையும் சேர்க்க கூடாது. இவ்வாறு வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து, மானாவாரி விவசாயத்திலும் அதிக விளைச்சல் பெற்று, வருமானத்தை பெறுக்கிடலாம். மேலும் விதைகளின் தரத்தை பரிசோதனை செய்ய பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் 100 கிராம் நெல் விதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனை கட்டணமாக செலுத்தி விதைகளை பரிசோதனை செய்யுமாறு விதை பரிசோதனை அலுவலர் ம.மகாலெட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி ஆகியோர் விவசாயிகளுக்கு தகவல் தெரிவித்து உள்ளனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டாரம்
## அட்மா திட்டத்தின் விவசாயிகள் பயிற்சி

திண்டுக்கல், ஜுலை 26

திண்டுக்கல் மாவட்டம், சில்வார்பட்டி கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குனர் உமா எம் ஐ, தலைமையில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் முன்னிலையில் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய அலுவலர் மேரி விதை பரிசோதனை , மேலாண்மை மற்றும் அதன் முக்கியத்துவம் சாகுபடி , பராமரிப்பு முறை நுண் உரங்களின் பயன்பாடு மற்றும் இயற்கை சாகுபடி முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் கார்த்திக், அலுவலக கிட்டங்கியில் மானிய விலையில் விதைகள் மற்றும் உரங்களை வாங்கி பயன் பெறலாம் என கூறினார் . உதவி வேளாண்மை அலுவலர் செந்தில், துறை திட்டங்கள் மானிய விபரங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி விவசாயிகளை ஒருங்கிணைத்து பெரிதும் உதவினார். இப் பயிற்சியில் உதவி தோட்டக்கலை அலுவலர் ராஜா துறை திட்டங்கள் மானிய விபரம் பற்றி விளக்கி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பெவேரியா பேசியானா பயன்பாடு!

பெவேரியா பேசியானா பூச்சிகளை தாக்கி அழிக்கும் பூஞ்சாணம்.

மக்காச்சோள படைப்புழு, நெல் இலைச் சுருட்டுப்புழு, புகையான், வெள்ளை ஈ.வைர முதுகு பூச்சி, காய் புழுக்கள், நிலக்கடலை இலைச்சுருள் பூச்சி, மா–கூன் வண்டு, முந்திரி தண்டு துளைப்பான், மாவுப்பூச்சி, அசுவினி, இலைப்பேன் மற்றும் சிலந்திப்பேன் போன்றவற்றை கட்டுப்படுத்தக்கூடியது.

**பயன்படுத்தும் முறை**

**விதை நேர்த்தி :** 1கிலோ விதைக்கு 10 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்யலாம்.

**வயலில் இடுதல் :** 50 கிலோ தொழு உரத்தில் 2 கிலோ பெவேரியா கலந்து 15 நாட்கள் கழித்து 1 ஏக்கர் நிலத்தில் இடலாம்.

**தெளிப்பு முறை :** 1 ஏக்கருக்கு 1.5 கிலோ பெவேரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

# சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிட விவசாயிகளுக்கு அறிவுரை

இந்திய பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விவசாயம் சிறப்பாக இருக்கவேண்டுமானால், இடுபொருட்கள் தரமானதாக உரிய நேரத்தில் தேவைப்படும் அளவு விவசாயிகளுக்கு கிடைப்பது அவசியம். விதை என்ற அடிப்படை இடுபொருளை தேர்ந்தெடுக்கும் போது, சிறிது கவனக்குறைவு ஏற்பட்டாலும் மொத்த விளைச்சலும் பாதிக்கப்படும்.

விதையே விளைச்சலுக்கு ஆதாரம். விதை மட்டுமே 60 சதவீத மகசூலை நிர்ணயம் செய்கிறது. எனவே சான்றுப் பெற்ற விதைகளை மட்டுமே விவசாயிகள் கண்டிப்பாக பயன்படுத்திட வேண்டும்.

**சான்றுப் பெற்ற விதையின் சிறப்பியல்புகள்**

1. சான்றுப்பெற்ற விதைகள் அந்த இரகத்திற்குரிய பாரம்பரிய குணங்களை கொண்டிருக்கும்.

2. அதிகப்படியான முளைப்புத்திறன் கொண்டிருக்கும்.

3. விதையாக பயன்படுத்துவதற்குரிய அனுமதிக்கப்பட்ட ஈரப்பதம் உடையதாக இருக்கும்.

4. விதையின் தரத்திற்கு தேவையான இனத்தூய்மை மற்றும் புறத்தூய்மை உடையதாக இருக்கும்.

5. பிற இரக விதைகள் மற்றும் களைகள் இல்லாமல் இருக்கும்.

**சான்றுப் பெற்ற விதைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்**

1. விதைகள் நன்கு முளைத்து வாளிப்பான நாற்றுக்கள் கிடைக்கும். அவ்வாளிப்பான நாற்றுக்களை கொண்டு, இயந்திர நடவு மற்றும் செம்மைநெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யும்போது ஒன்று அல்லது இரண்டு நாற்றுக்களைக் கொண்டு நடவு செய்திட இலகுவாக இருக்கும்.

2. தேவையான பயிர் எண்ணிக்கையை பராமரிக்கலாம்.

3. பயிரின் வளர்ச்சி ஒருமித்து சீராக இருக்கும். இதனால் பயிர்கள் ஒரே நேரத்தில் பூத்து, ஒரே நேரத்தில் முதிர்ச்சியடையும். இதனால் ஒரே நேரத்தில் அறுவடை செய்யலாம்.

4. களப்படமில்லாத அதிக மகசூல் கிடைக்கும்.

5. விளைப்பொருளுக்கு நியாயமான விலை கிடைக்கும்.

இத்தகைய சிறப்பு பண்புகள் கொண்ட சான்றுப்பெற்ற விதைகளை அனைத்து விவசாயிகளும் வாங்கி பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்றிடுமாறு நாகப்பட்டினம் மாவட்ட விதைச் சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் ஆர்.சுதா விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இப்கோ – நானோ யூரியா பிளஸ்

நானோ யூரியா பிளஸ் 20% தழைச்சத்து கொண்டது. பயிர்களுக்கு தேவையான தழைச்சத்தை திறம்பட பூர்த்தி செய்து, பயரின் வளர்ச்சியை அதிகரிக்கும். மேலும் நுண்ணூட்டச் சத்துக்களின் செயல்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.

**பயன்படுத்தும் முறை**

(ஒரு மூடி நானோ யூரியா பிளஸ் பாட்டிலின்அளவு=25 மி. லி.)

**இலைவழி தெளிப்பு**

2 -4 மி. லி. நானோ யூரியாவை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு, தூர்விடும் தருவாயில்) முதல் தெளிப்பாகவும், முதல் தெளிப்பு தெளித்த 20 -25 நாட்களுக்கு பிறகு அல்லது பூக்கும் பருவத்திற்கு முன்பு இரண்டாம் தெளிப்பு தெளிக்கலாம்.

(குறிப்பு : யூரியா, டி.ஏ.பி அடி உரத்தைதவிர்க்க வேண்டாம், மேல் உரமாக அளிக்கப்படும் யூரியாவை தவிர்த்து நானோ யூரியா பிளஸ் திரவ உரத்தை பயன்படுத்தவும்.)

ஒரு ஏக்கருக்கு 250- 500 மி. லி. நானோ யூரியா பிளஸ் பயன்படுத்தவும்.

**தெளிப்பான்கள் பொருத்து நானோ யூரியா பிளஸ் அளவு**

**பேட்டரி தெளிப்பான்**

15 -16 லிட்டர் டேங்கிற்கு 2 -3 மூடி (50- 75 மி. லி.) பயன்படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10 டேங்க் போதுமானது).

**விசை தெளிப்பான்**

20 -25 லிட்டர் டேங்கிற்கு 3 -4 மூடி (75- 100 மி. லி.) பயன்படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 4 முதல் 6 டேங்க் போதுமானது).

**ட்ரான் தெளிப்பான்**

10 -12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி. லி. நானோ யூரியாவை பயன்படுத்தவும். (பொதுவாக ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது).

இப்கோ நானோ உரங்கள் "சங்கடஹரன் பீமாயோஜனா" வின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

- ADVT.

# விதைப்பருத்தி அறுவடை மற்றும் பின் செய் நேர்த்தி முறைகள்

விதைப்பருத்தியில் தக்கத் தருணத்திற்கு முன்பே அறுவடை செய்வதால் விதைகள் சுருங்கி சிறுத்துக் காணப்படும். இதனால் முளைப்புத் திறன் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அதேசமயம் கால தாமதமாகப் பறித்தாலும், சுற்றுப்புற சூழலினால் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். பொதுவாக மகரந்தச் சேர்க்கை நடைபெற்று 45 முதல் 55 நாட்களில் விதைகள் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும். நன்கு வெடித்தக் காய்களை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். குளிர் கால பருத்தி பயிரில் முதல் ஐந்து பறிப்புகள் மற்றும் கோடைகால பருத்தி பயிரில் முதல் நான்கு பறிப்புகள் மட்டுமே விதைக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். அதன் பின் பறிக்கும் காய்களிலிருந்து பெறப்படும் விதைகள் தரம் குறைந்ததாக இருக்கும்.

விதைப்பருத்தி அறுவடைக்கு காலை வேலையே ஏற்றது. பறிக்கும்



பொழுது விதைப் பஞ்சுகளை மட்டுமே பறிக்க வேண்டும். பறித்தப் பின் இரண்டு, மூன்று நாட்கள் நிழலில் உலர்த்த வேண்டும். பருத்தி காய்களில் இருந்து விதையைப் பிரித்தெடுக்கும் போது விதையின் ஈரப்பதம் 15 முதல் 18 சதவிகிதம் இருத்தல் வேண்டும். ஏனெனில் இந்த ஈரப்பதமானது மெத்தை போல் செயல்பட்டு விதைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கிறது. விதைகள் பாதிக்கப்படும் போதுஅதன் தரம் மற்றும் முளைப்புத் திறன் குறைவதோடு பூஞ்சாணத் தாக்குதலுக்கும் ஏதுவாகிறது.

பஞ்சு நீக்கம் செய்ய இயந்திரங்களை உபயோகப்படுத்தும் போது உருளையின் வேகம், உருளைக்கும் கட்டுக்கும் உள்ள இடைவெளி தக்க முறையில் சரி செய்து பயன்படுத்துவதன் மூலம் விதைகளில் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். இவ்வாறு பிரித்தெடுத்த விதைகளைப் பின் நிழலில் உலர்த்தவேண்டும். ஒரு முறை பஞ்சு நீக்கிய விதைகளை மறு முறை பஞ்சு நீக்கம் செய்ய உட்படுத்த கூடாது. விதைகள் பிரித்தெடுக்கப்பட்டவுடன் முறைப்படி உலர வைக்கப்படாவிட்டால் விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். விதைகளை 10 சதவீத ஈரப்பதத்திற்கு உலர்த்த வேண்டும்.

விதைச்சுத்திகரிப்பின் போது முற்றாத, உடைந்த, பூச்சிநோய்த் தாக்குதல் மற்றும் தரம் குறைந்த விதைகளையும், விதையுடன் கலந்து இருக்கும் கல், மண், தூசி மற்றும் பிற விதைகளையும் நீக்கிவிடவேண்டும். விதை சுத்திகரிப்பின் போது பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரு இரகத்திற்கு பயன்படுத்தி விட்டு, வேறு இரகத்திற்கு பயன்படுத்தும் பொழுது நன்குசுத்தம் செய்வது அவசியம். இல்லையெனில் விதைக்கலப்பு நேர்ந்து விதைகளின் 'இனத்தூய்மை'பாதிக்கப்படும். இரகப் பருத்தியில் முளைப்புத்திறன் 65 சதவிகிதம் இருக்க வேண்டும். விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளார்கள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை சரியான முளைப்புத்திறன் உடையதா என பரிசோதிக்க வேண்டும்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தி யாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை தூத்துக்குடி எட்டயாபுரம் ரோடு ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் செயல்படும் விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் உரிய கட்டணம் செலுத்தி விதைகளை பரிசோதிக்கலாம் என நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா, தூத்துக்குடி விதைப்பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் சேக் நூஹ் ஆகியோர் தெரிவிக்கிறார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# மண்டபம் வட்டாரத்தில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது




இராமநாதபுரம், ஜூலை 26

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் கீழ் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் குயவன்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு இராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் மாநிலத் திட்டம் எம்.கே.அமர்லால் முன்னிலை வகித்தனர். திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா பேசுகையில் தென்னையில் குரும்பைகள் உதிர்தல், வறட்சி மேலாண்மை மற்றும் தென்னையில் மகசூலை அதிகரிக்க நுண்ணூட்ட உரம் இடுதல் அவசியம் குறித்து கூறினார். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் வள்ளல் கண்ணன், தென்னையில் ஒருங்கிணைந்த பயிர் நிர்வாகம், மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். முனைவர் ராம்குமார், தென்னையில் பூச்சி மேலாண்மை குறித்து கூறினார். நிகழ்ச்சியில் நாகராஜன் வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு), ஸ்ரீதர், மாவட்ட ஆலோசகர் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்,வேளாண் விற்பனைக்குழு செயலாளர் ராஜா, உதவி விதை அலுவலர் ஆனந்த் ஆகியோர் பேசினார்கள். நிகழ்ச்சி முடிவில் சீதாலெட்சுமி வேளாண்மை அலுவலர் நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப அலுவலர்கள் பானுமதி, பவித்ரன் மற்றும் உதவி வேளாண் அலுவலர் சண்முகநாதன் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் மண்டபம் ராமநாதபுரம் திருப்புல்லாணி ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை வேளாண்மை பயிற்சி

கடலூர், ஜூலை 26

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை வேளாண்மை நண்பர்களுக்கான 5 நாட்கள் (22.07.24 முதல் 26.07.24) வரை பயிற்சி நடைபெற்றது.

தொடக்க பயிற்சிக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் தலைமை தாங்கி தொடங்கி வைத்து பேசினார். இதனை தொடர்ந்து தொழில் நுட்ப விஞ்ஞானிகள், இயற்கை வேளாண்மை பற்றியும், மண்வளம் பேணிகாப்பது குறித்தும், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், மண்வளத்தை மீட்டு எடுத்தல், சுற்றுசூழல் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மேலாண்மை, மண்ணின் ஆரோக்கியம், மண் மற்றும் நீர் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும், மண் சேகரிப்பு முறைகள் பற்றியும், இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தயாரிப்பது குறித்தும், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் பாரம்பரிய விதைகள் தேர்வு குறித்தும் பயிர் மற்றும் கால்நடை ஒருங் கிணைப்பு, பல்வேறு நன்மை பயக்கும் தாவர களைக் கொல்லி களின் முறையான பயன் பாட்டினை வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் விளக்கினர்.

ஒருங்கிணைந்த பண்ணையில், ஆடு, மாடு, வாத்து பல பயிர் சாகுபடி நேரடியாக மாதிரி பண்ணையில் காண்பிக்கப்பட்டது. இயற்கை உற்பத்திக்கான சான்றிதழ் மற்றும் சந்தைப்படுத்துதல். விவசாய முறைகள் மற்றும் விதை அமைப்பு பற்றி கடந்த ஐந்து நாட்கள் எடுத்துரைத்தனர், மேலும் இயற்கை வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு மற்றும் அனுபவங்களை முன்னோடி விவசாயிகள் பயிற்சியில் எடுத்துரைத்தனர். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் பாரம்பரிய இரகங்களை பற்றியும் அதன் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தனர். இயற்கை வேளாண் ஆர்வலர் இளையராஜா, மீன் அமில உர உற்பத்தியை செய்து காட்டினர். பயின்ற பாடத்தை அனைவரும் தேர்வு எழுதி கற்றதினை அனுபவமாக உணர்ந்தனர்.

இப்பயிற்சியில் நல்லூர் வட்டாரத்தை சேர்ந்த 30 மகளிர் சமுதாய களப் பயிற்றுனர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.